**குவைத்தினால் நிதியளிக்கப்பட்ட பாலங்களின் நிர்மாண மற்றும் புனரமைத்தல் செயற்திட்டம் - 2015**

குவைத்தினால் நிதியளிக்கப்பட்ட பாலங்களின் நிர்மாண மற்றும் புனரமைத்தல் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 1995 மார்ச் 27 மற்றும் 2001 செப்தெம்பர் 03 ஆந் திகதிய 466 மற்றும் 627 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலம் என்பன**

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தற்போது உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சாகவுள்ள முன்னாள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. விவசாய மற்றும் கைத்தொழில் பொருட்களின் போக்குவரத்துக் கிரயத்தை குறைப்பதன் மூலமும் நாட்டின் பிராந்தியங்களிற்கும் தலை நகரத்திற்குமிடையிலான பிரயாண நேரத்தினைக் குறைப்பதன் மூலமும் இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு உதவுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3,432 மில்லியனுக்குச் சமனான குவைத் தினார் 10.12 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 1,728.2 மில்லியனுக்குச் சமனான குவைத் தினார் 5.10 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் இணங்கியிருந்தது. செயற்திட்டத்தின் அதனது நடவடிக்கைகளை 1995 மார்ச் 27 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 1997 திசெம்பர் 31 அளவில் 33 மாதங்களினுள் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டக் காலம் 10 சந்தர்ப்பங்களில் மேலும் 19 ஆண்டுகளிற்கு 2016 மார்ச் 24 ஆந் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல்

என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை

கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | **கு.தி மில்.** | **ரூபா மில்.** | **ரூபா மில்.** | **கு.தி. மில்.** | **ரூபா மில்.** | **கு.தி மில்.** | **ரூபா மில்.** |
| கேஎவ்ஏஈடி | 5.10 | 1,728 | 44.03 | 0.098 | 44.03 | 3.78 | 1,667.79 |
| ஜீஓஎஸ்எல் | 5.02 | 1,704 | 17.75 | - | 17.20 | - | 1,686.51 |
| **மொத்தம்** | **10.12** | **3,432** | **61.78** | **0.098** | **61.23** | **3.78** | **3,354.30** |

மேற்படி தகவல்களிற்கமைய, செயற்திட்டக் காலம் 2016 மார்ச் 24 வரை காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டமானது குவைத் தினார் 5.10 மில்லியன் ஒதுக்கீட்டில், 74.12 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குவைத் தினார் 3.78 மில்லியனை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது. ஆகவே செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை உச்ச அளவில் பயன்படுத்திக்கொள்வதற்கு செயற்திட்டம் பொருத்தமான பௌதீக மற்றும் நிதிசார் திட்டங்களை தயாரித்து அமுல்படுத்தியிருக்கவில்லை என்பதற்கு இது சான்றாக உள்ளது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

கிடைக்ககூடியதாகவுள்ள தகவல்களின் படி, தேசிய வீதிகளிலுள்ள 32 குறுகிய மற்றும் பலவீனமான பாலங்களை புனரமைத்து, நிர்மாணித்து மீளவைத்தல் மற்றும் கெடம்பே – கன்னோருவ வீதியின் அகலமாக்குதல் வேலைகள் 2011 ஏப்ரல் மாதத்தில் பூரணப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், காலி – தெனியாய – மாதம்பை வீதியில் 03 பாலங்களை நிர்மாணித்தல் ஆரம்பத்தில் இடம்பெற்ற வேலைகள் தொடர்பில் சேமிக்கப்பட்ட குவைத் தினார் 256,224 இனை பயன்படுத்தி செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், செயற்திட்டக் காலம் 2016 மார்ச் 24 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வேலைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் கூட பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

காலி – தெனியாய வீதியில் 2016 செப்தெம்பர் 22 ஆந் திகதி கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் விதியிலுள்ள இல. 1/3, இல. 2/1 மற்றும் இல. 51/1 பாலங்களின் இரு முனைகளின் விரிவாக்கல் இணைப்புக்களிற்கு உரிய முறையில் ''எஸ்பல்ட்'' இடப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும், காலி வீதியின் முடிவிலுள்ள இல. 1/3 பாலத்தின் பக்கவாட்டு தூன் மற்றும் கழிவோடை சுவர், தெனியாய வீதியின் முடிவிலுள்ள இல. 2/1 பாலத்தின் பக்கவாட்டுச் சுவர் மற்றும் தூன் ஆகியவற்றுக்கு இடையே இடையே காணப்பட்டது. இல. 51/1 பாலத்தின் சுவரும் உரிய முறையில் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் தெனியாய பாலத்தின் முடிவுப் பகுதியில் சேதமடைந்திருந்தது.

### 3.4 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி சுவீகரிப்புக்களிற்கான இழப்பீட்டினைத் தீர்ப்பதில் தாமதித்திருந்தமை காரணமாக செயற்திட்டத்தினால் ரூபா 69 மில்லியன் தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைவதில் நேரடியாக தொடர்புபட்டிராத திறப்பு விழா ஒன்று தொடர்பில் மீளாய்வாண்டின் போது ரூபா 5.9 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.